# நான்கு ஐ.பி.ஓ.,க்கு ‘செபி’ அனுமதி

புதுடில்லி, நவ. 14–

‘பெடரல்’ வங்கியின் துணை நிறுவனமான ‘பெட் பேங்க் பைனான்சியல் சர்வீசஸ்’, இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனமான ஐ.ஆர்.இ.டி.ஏ.,, ‘இபேக் டியூரபிள்’ மற்றும் ‘சூரஜ் எஸ்டேட் டெவலப்பர்ஸ்’ ஆகிய நான்கு நிறுவனங்களின் புதிய பங்கு வெளியீட்டுக்கு ‘செபி’ அனுமதி வழங்கியுள்ளது.

பெட் பேங்க் பைனான்சியல் சர்வீசஸ் நிறுவனம், 750 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பங்குகளையும்; 7.03 கோடி பங்குதாரர்களின் பங்குகளையும் வெளியிட உள்ளது.

இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், 40.31 கோடி புதிய பங்குகளையும்; 26.88 கோடி பங்குதாரர்களின் பங்குகளையும் வெளியிட உள்ளது.

இபேக் டியூரபிள் நிறுவனம், 400 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பங்குகளையும்; 1.30 கோடி பங்குதாரர்களின் பங்குகளையும் வெளியிட உள்ளது.

சூரஜ் எஸ்டேட் டெவலப்பர்ஸ், 400 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பங்குகளை வெளியிட உள்ளது.